**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திருமதி **V.** பார்கவி**.,B.A.,B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் சித்திரை மாதம் 09-ஆம்நாள்

------

**அசல் வழக்கு எண்.223/2018-ல் இடைமனு எண்.02/2020ல் இடைமனு எண். 7/2021**

1. சுமதி
2. முத்துகுமரன்
3. விஜயலெட்சுமி ..மனுதாரர்கள்/மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்...

உமா ..எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 13.4.22 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். சுவாமிநாதன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக விசாரணை முடிக்கப்பட்டுள்ள இடைமனு எண். 2/2020யை மறுதிறப்பு (Re-open) செய்ய அனுமதி கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151- ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கை மனுதாரர் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி மனுதாரர்கள் இடைமனு எண். 2/2020 தாக்கல் செய்துள்ளனர். இடைமனு எண்.2/2020ல் மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இடைமனு எண்.2/2020ல் சில ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிவுக்கப்பட்டுள்ளதை

மறுதிறப்பு (Re-open) செய்ய உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **<u>எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணைக் குறிப்பாணைச் சுருக்கம்</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. இருதரப்பிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கு வாதுரை செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இந்நிலையில் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் தங்களுடைய ஆவணங்களை குறியீடு செய்யும்போதே வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பற்றி தெரியும் .எனவே இடைமனு எண்.2/2020-யை மறுதிறப்பு செய்ய வேண்டுமெனக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. **<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கை எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி மனுதாரர்கள் இடைமனு எண். 2/2020 தாக்கல் செய்துள்ளனர் என்றும், இடைமனு எண்.2/2020ல் மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இடைமனு எண்.2/2020ல் சில ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் மனுதாரர்கள் தரப்பு விசாரணை முடிவுக்கப்பட்டுள்ளதை மறுதிறப்பு (Re-open) செய்ய உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் இருதரப்பிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வழக்கு வாதுரை செய்ய வேண்டிய நிலையில் உள்ளது என்றும், இந்நிலையில் வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் தங்களுடைய ஆவணங்களை குறியீடு செய்யும்போதே வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பற்றி தெரியும் என்றும், எனவே இடைமனு எண்.2/2020-யை மறுதிறப்பு செய்ய வேண்டுமெனக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும்,

எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்கள்/ வாதிகள் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைமனு எண்.2/2020ல் மனுதாரர்கள் தரப்பு வாதுரை முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதை மனுதாரர்கள் தரப்பில் சில ஆவணங்களை குறியீடு செய்வதற்காக இடைமனு எண்.2/2020-ல் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள தை மறுதிறப்பு செய்ய வேண்டுமென மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ளனர். இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு அவர்கள் தரப்பை நிரூபிக்க போதுமான வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற அடிப்படையிலும், ஒரே பொருண்மையின் அடிப்படையில் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் (Multiciplity of proceedings ) மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ளவாறு அவர்கள் தரப்பில் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக எதிர்மனுதாரர்தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள இடைமனு எண்.2/2020யை மறுதிறப்பு செய்ய வேண்டுமென்று கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாணங்கள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 223/2018-ல்
இடைமனு எண். 02/2020-ல்
இடைமனு எண். 07/2021
நாள் - 22.04.2022